ஆற்காடு தொகுதி, ஆற்காடு வட்டம், ஆற்காடு நகரத்திலுள்ள அரசு மருத்துவமனையில் கண் மருத்துவப் பிரிவு மற்றும் பல் மருத்துவப் பிரிவு அமைப்பதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆற்காடு தொகுதி, ஆற்காடு வட்டம், ஆற்காடு நகரத்திலுள்ள அரசு மருத்துவமனையில் பல் மருத்துவப் பிரிவு உள்ளது. கண் மருத்துவப் பிரிவு தற்போது இல்லை. உலக வங்கி நிதி உதவியில் ரூ.31 இலட்சம் செலவில் தேசிய கண்ணொளி இழப்புத் திட்டத்தில் 16 படுக்கைகள் மற்றும் அறுவைச் சிகிச்சை அரங்குடன் கூடிய கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி.என். சுப்பிரமணி, இருக்கையில் இல்லை.

வினா எண் 144, திரு. இரா. மகேந்திரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

144—

அவசர விபத்துப் பிரிவு தொடங்குதல்

***16685—திரு. இரா. மகேந்திரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்றாம்பள்ளி தொகுதி, நாட்றாம்பள்ளியிலுள்ள அரசு பொது மருத்துவமனையில் அவசர விபத்துப் பிரிவு ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நாட்றாம்பள்ளியில் அரசு பொது மருத்துவமனை செயல்படவில்லை. ஆனால், அங்கு 24 மணிநேரமும் செயல்படும்

1999 மார்ச் 23]

பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. அதில் அவசர விபத்துப் பிரிவு ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்ராம்பள்ளி, சென்னை-பெங்களூர் செல்கின்ற தேசிய நெடுஞ்சாலையில் அமைந்திருக்கிறது. எங்கள் பகுதியில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. விபத்துக்கள் ஏற்படுகின்றபோது வேலூர் அல்லது பெங்களூர் போன்ற ஊர்களில் உள்ள பெரிய மருத்துவமனைகளுக்குச் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. அவ்வாறு செல்கின்றபோது, வழியிலேயே விபத்துக்கு ஆளானவர்கள் இறந்து விடுகிறார்கள். கடந்த ஆண்டுகூட ஆம்பூர் அருகே எனக்கு ஏற்பட்ட விபத்தில் நான் C.M.C. போன்ற நல்ல வசதிகள் கொண்ட மருத்துவமனைக்குச் சென்றதால் உயிர் பிழைத்துக் கொண்டேன். என்னோடு வந்த இரண்டு மாமனிதர்கள் அப்போதே இறந்துவிட்டார்கள். இதையெல்லாம் மனதில்கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருங்காலத்திலே எங்களுடைய நாட்ராம்பள்ளியில் செயல்படுகின்ற 24 மணிநேர மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவை ஏற்படுத்த மறுபரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 24 மணி நேரமும் செயல்படும் பிரதான ஆரம்ப சுகாதார நிலையத்தில் அப்படிப்பட்ட வசதிகளைச் செய்து தர இயலாது. ஏற்கெனவே நெடுஞ்சாலையில் 100 கிலோமீட்டருக்கு ஓர் இடத்தில் இப்படிப்பட்ட அவசர விபத்துக்கான பிரிவைத் தொடங்க வேண்டுமென்று முதல்வரவர்கள் திட்டமிட்டு இப்பொழுது வாலாஜா, வேலூர், கிருஷ்ணகிரி போன்ற இடங்களில் எல்லாம் அவசர விபத்துப் பிரிவு ஒன்று தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 150, திரு. லி. அய்யலுசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.